## *புனித காந்தர்பரி தோமாஸ் (டீநஉமநவ) (1117 – 1170)*

இவர் லண்டனில் 1117-ஆம் ஆண்டில் பிறந்தார். தேவ தாயின் மீது இவருக்கு அதிக பக்தி உண்டு. இந்த பக்தியை இவருடைய தாய் இவரது உள்ளத்தில் ஊன்றினாள். தமது படிப்பை முடித்த பிறகு குருவாக தீர்மானித்து, குருவாகி, காந்தர்பரி பேராயரான தேயோபால்டு என்பவருடன் வாழ்ந்து வந்தார். அவரது அனுமதியுடன் இத்தாலி நாட்டுக்குச் சென்று பொலோஞா நகரில் திருச்சபைச் சட்டக்கல்வி பயின்றார். இங்கிலாந்துக்கு திரும்பியதும் திருத்தொண்டர் பட்டம் பெற்று காந்தர்பரி ஆலயத்தில் உயர்ந்த பதவி வகித்தார். அப்பொழுது நாட்டை ஆண்டு வந்தவன் 2-ஆம் ஹென்றி தயோபால்டு பேராயரின் சிபாரிசின் மேல் அரசன் இவருக்கு நாட்டில் உயர்ந்ததோர் வேலையைக் கொடுத்தான். இவர் அதைத் திறம்படச் செய்து வந்தார்.

1160-ஆம் ஆண்டில் பேராயர் இறந்ததும் அரசன் இவரைக் கட்டாயப்படுத்தி பேராயர் பதவி ஏற்கச் செய்தான். சற்றுப்பின் அரசனுக்கும், பேராயருக்குமிடையே மனஸ்தாபம் ஏற்பட்டது. பேராயர் திருச்சபையின் உரிமைகள் சம்பந்தப்பட்டவற்றில் அரசனின் பிரியப்படி நடக்க தயராக இல்லை. சில ஊழல்களை பேராயரால் சகிக்க முடியவில்லை. பேராயர், தன்னை மதிக்கவில்லை என அரசன் நினைத்து, பேராயரை மிகமிக துன்புறுத்தினான். அவர் இரகசியமாய் நாட்டை விட்டு வெளியேறி பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார். அப்பொழுது அங்கு பாப்புவாக 3-ஆம் அலெக்சாந்தர் இருந்தார். பாப்பு அவரை அன்புடன் வரவேற்றார். சற்றுப்பின் அவர் இங்கிலாந்து திரும்பினார். சாவை நாடிப்போகிறேன் என்ற உணர்ச்சியுடன் போனார். மக்கள் அவரை பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றார்கள். ஆனால் முடிவு சமீபித்திருந்தது. அரசன் கோப வெறியில் சில சொற்களைச் சொல்லி விட்டான். "எனக்குத தொல்லை கொடுக்கும் இவரைத் தொலைக்க நாட்டில் ஒருவருமில்லையா?" என்ற சொற்கள் வாயிலிருந்து வந்துவிட்டன. சிலர் ஆயுதங்களுடன் கோவிலுக்குப் போனார்கள். பீடத்தினடியில் செபித்துக் கொண்டிருந்த பேராயரை 1170-ஆம் ஆண்டில் கொன்றார்கள்.

இவர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் இவருக்கு மறைசாட்சி என புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. 8-வது ஹென்றி மன்னனின் ஆட்சிவரை நம் புனிதரின் திருத்தலத்திற்கு மக்கள் திரள் திரளாய் திருயாத்திரையாகப் போனார்கள். இங்கிலாந்திலுள்ள மறைமாவட்டக் குருக்களின் பரலோக பாதுகாவலராக இவர் வந்திக்கப்படுகிறார்.

**சிந்தனை:**

திருச்சபை இயேசுவின் பத்தினி. அதன் உரிமைகள் புனிதமானவை அவற்றை பாதுகாப்பது நமது கடமை.

**செபம்:**

ஆண்டவரே, எதிரிகளின் கையிலிருந்து திருச்சபையைக் காத்தருளும்.